**தலைப்பு 140 – மலைநாட்டு புதிய கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 140 – மலைநாட்டு புதிய கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 பெப்ரவரி 15 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 1,146.47 மில்லியனாக இருந்ததுடன், இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,056.88 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 89.59 மில்லியன் அதாவது 7.81 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 322.03 | 271.08 | 50.95 | 15.82 |
| மூலதனம் | 824.44 | 785.80 | 38.64 | 4.69 |
| மொத்தம் | 1,146.47 | 1,056.88 | 89.59 | **7.81** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 14001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 12.50 | 6.62 | 6.00 | 7.42 | 40.00 | 21.23 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின்கீழுள்ள கீழே குறிப்பிடப்படுகின்ற 02 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை 37.95 ரூபா 0.07 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0016/0082/000 | 26.04 |
| 6000/0000/00/0013/0088/000 | 11.91 |
| மொத்தம் | 37.95 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

மலைநாட்டு புதிய கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

அமைச்சினால் நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 18 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக அந்த விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ஒதுக்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் 40 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,060,000 தொகையான மொத்தத் தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் 2502 செலவின விடயத்தின் கீழ் கிராமிய பிரதேசங்களில் ஜீவனோபாய மற்றும் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 200 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தினால் மூலதன வடிவிலான செலவினங்களுக்காக ரூபா 61.22 மில்லியனும், வருமானச் செலவினங்களுக்காக ரூபா 56.63 மில்லியன் தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 117.85 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

14001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற 05 உத்தியோகத்தரிடமிரந்து 2 வருடங்கள் முதல் 11 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 253,143 கூட்டுத்தொகையான கடன் மீதிகள் தொடர்பாக 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 1.1.6 மற்றும் 1.1.7 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டின் போது வேலையைக் கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 107,896 தொகையான கடன் மீதி, தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து 2016 யூன் 10 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.4.1 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் ரூபா 500.6 மில்லியன் தொகையான நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் அதில் 10 சதவீதமான ரூபா 48.9 மில்லியன் பெறுமதியான நிர்மாணங்கள் மாத்திரமே கணக்காய்வு செய்யப்பட்டிருந்தன.

**3.4.2 சொத்துக்களின் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது வாகனங்கள் தொடர்பான மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சிற்குச் சொந்தமான 04 வாகனங்கள் முறையாகக் கையேற்கப்படாமல் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.5 இணங்காமைகள்**

**(அ) சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பமொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

நிதிப்பிரமாணம் 755(1) மற்றும் 755 (2) இன் பிரகாரம் பொருட்களைக் கையளிக்கும் போதும், கையேற்கும் போதும் சகல அரசாங்கத்தின் பொருட்களும் ஏனைய ஆதனங்களும் உள்ளபடியான இருப்புக்களுடன் பேரேட்டில் இல்லாதிருப்பினும், பொருட் பதிவேட்டில் காணப்படுகின்ற மீதிகள் ஒப்பிட்டுப் பரீட்சித்து சமப்படுத்தி கையேற்ற மற்றும் கையளித்த உத்தியோகத்தரிடமிருந்து அப்பொருட்கள் கையேற்கப்பட்டமைக்கும் கையளிக்கப்பட்டமைக்கும் பற்றுச்சீட்டொன்று பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சு மாற்றங்களின் போதும், பொருட்கள் கையளிக்கும் போதும், கையேற்கும் போதும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இனங்காமை

பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 10 விலைப்பட்டியல்களுக்காக அமைச்சினால் ரூபா 4,204,044 தொகையான பெறுமதிசேர் வரி செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிறுவனம் 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச் சட்டத்தின் 2(அ) பிரிவின் பிரகாரம் அந்த வரிக்காக பதிவு இலக்கமொன்று பெறப்படாதிருந்ததுடன் அவ்வாறு செலுத்தப்பட்ட வரி தொடர்பாக 2002 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் 364(3) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையில் 5 ஆம் பந்தியின் பிரகாரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

### 3.6.1 பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் மூலம் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டம்

2010 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டு வருவதும் தற்போதைய மலைநாட்டு புதிய கிராமங்களின், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களின் பணிகள் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்த செயற்திட்ட பணிகளிலிருந்து அதிக சதவீதமான பணிகள் செயற்திட்ட ஆரம்பம் முதல் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் முன்னைய 2 ஆண்டுகளிலும் மீளாய்வாண்டின் போதும் அதன் செயற்திட்டத்திற்காக பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு மாத்திரம் ரூபா 1,259.28 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தை தெரிவு செய்தல், அதற்கான நலனாளிகள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்தல் போன்ற செயற்பாடுகள் அமைச்சின் மேற்பார்வையின்றி பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பினால் நிறைவேற்றப்பட்டிருந்தது. அரசாங்க நிதியைச் செலவிடும் போது பின்பற்றப்பட வேண்டிய அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளினதும் ஏனைய சுற்றறிக்கையின் தேவைகளினதும் பிரகாரமும் நடவடிக்கை எடுத்திருந்தமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு போதியளவான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு, அரசாங்க நிறுவனமா தனியார் நிறுவனமா என உறுதிப்படுத்திக்கொள்வதற்கு அது தாபிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் அமைச்சிலோ அல்லது நிறுவனத்திலோ காணப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த நம்பிக்கைப் பொறுப்புடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல வருட காலமாக அமுல்படுத்தப்படுகின்ற புது வாழ்க்கை தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்டமொன்றின் கீழ் வழங்கப்பட்டிருந்த வீடமைப்புக் கடனை மீள அறவிட்டு அமைச்சிற்கு வழங்கும் அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான வழிகாட்டலின் பிரகாரம் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின் பொறுப்பாக இருந்த போதிலும், அவ்வாறு சேகரிப்பட்ட பணம், அமைச்சிற்குக் கையளிக்கப்படாமல் நம்பிக்கைப் பொறுப்பின் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.6.2 செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல்

முன்னைய ஆண்டில் ரூபா 1,542,684 கூட்டுமொத்தமான 20 சதவீத முற்பணம் செலுத்தப்பட்டிருந்த 21 செயற்திட்டங்களின் வேலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டின் போது அந்த சகல செயற்திட்டங்களும் இரத்துச் செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்த முற்பணங்கள் 1 ½ வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கையில் வைத்திருப்பதற்கு இடமளிக்கப்பட்டதன் பின்னர் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வேறு செயற்திட்டங்களுக்காக ஈடுசெய்யப்பட்டிருந்தது.

## 3.7 செயலாற்றல்

புது வாழ்க்கை தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு நிர்மாணிப்பதற்கு கையளிக்கப்பட்டிருந்த 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட 617 வீடுகளில் 100 வீடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 531 வீடுகளின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு

முடியாதிருந்தது. அதன் பிரகாரம் திட்டமிடப்பட்ட வீடுகளிலிருந்து 16 சதவீதமானவர்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் 86 சதவீதமான நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.8 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

சுயதொழில் வழங்கும் நோக்கில் தோட்டங்களில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு கடன் வழங்கும் வகையில் சுழற்சி நிதியமொன்றை ஏற்படுத்துவதற்காக அரசாங்க வங்கியொன்றில் ரூபா ஒரு மில்லியனை வைப்புச் செய்வதற்கு 2000 ஆகஸ்ட் 24 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தை அமுல்படுத்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டம் 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையான காலத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 2004 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட தொகையை விஞ்சி ரூபா 300,000 தொகை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(இ) சுழற்சி நிதியத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனின் அளவில் கடன் பெற்றவர்களிடமிருந்து அறவிடல் மற்றும் நிலுவை மீதிகள் தொடர்பான விபரங்கள் உரிய வங்கியிலிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வங்கிக்கும் அமைச்சிற்கும் இடையே 2001 ஆம் ஆண்டின் போது ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கடன் வழங்கும் வங்கியின் சட்ட, விதிகளின் பிரகாரம் பிணையுடன் வழங்கப்பட வேண்டிய போதிலும், நிலுவைக் கடன் பணம் பிணை மூலம் அறவிடுவதற்கு வங்கியினால் முயற்சி எடுக்கப்பட்டமைக்கான எந்தச் சான்றுகளும் காணப்படவில்லை. சுழற்சி நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் 2013 சனவரி 30 ஆந் திகதி வரையிலும் அந்த நிதியத்திலிருந்து ரூபா 4,223,343 நிலுவைக் கடன் மற்றும் வட்டியாக கணக்கிலிருந்து அறவிடப்பட்டிருந்தது.

### 3.9 நட்டம் மற்றும் இழப்புக்கள்

அமைச்சரவை மாற்றத்திற்கு முன்னர் காணப்பட்ட கால்நடை வள மற்றும் கிராமிய சமுதாய அபிவிருத்தி அமைச்சின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டிருந்த வாகனமொன்று 2015 பெப்ரவரி 01 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியிருந்தது. அமைச்சின் வாகனப் பொறுப்பு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 308,855 தொகையான நட்டத்தை மீளளிப்புச் செய்வதற்காக காப்புறுதி நிறுவனத்திலிருந்து கோருவதற்கு நடவடிக்கை எடுக்காமல் உரிய மீளளிப்பிற்காக கோருவதில்லையென காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் வாகனக் காப்புறுதியிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படாமையினால் அரசாங்கத்திற்கு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. விபத்துத் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த விபத்துத் தொடர்பாக பொலிசில் முறைப்பாடொன்றும் செய்யப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கில் அந்த நட்டம் பதிவழிக்கப்பட வேண்டிய நட்டமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 3.10 முகாமைத்துவ நலிவுகள்

2006 ஒக்தோபர் 27 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,625,000 பெறுமதியான வாகனமொன்று 2010 நவம்பர் 11 ஆந் திகதி வெள்ளத்திற்குள் உட்பட்டமையின் காரணத்தால் பழுதுபார்த்தலுக்காக 2010 நவம்பர் 26 ஆந் திகதி கராஜிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. வாகனத்தில் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் குறிப்பிட்ட செயல் நடைமுறைகளின் பிரகாரம் மேற்கொள்ளாமை, 1999 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை

மற்றும் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்காமை போன்ற காரணங்களினால் ஒதுக்கப்பட்ட உரித்து ரூபா 200,000 இற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. வாகனத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக 2010 ஆம் ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வாகனம் நட்டத்தில் ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் தற்போதும் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

### 3.11 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு காணப்பட்டது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 11 | 04 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | - | 04 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 293 | 277 | 16 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 21 | 03 | - |
| (v) | ஏனைய (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 336 | 310 | 27 | 01 |